# Monthly Quiz file – December 2025

1. Which of the following is not a source of methane?

A) Natural gas

B) Wetlands

C) Termites

D) Photochemical smog

பின்வருவனவற்றில் மீத்தேன் வாயுவின் மூலமாக அல்லாதது எது?

A) இயற்கை எரிவாயு

B) ஈரநிலங்கள்

C) கரையான்கள்

D) ஒளிவேதியியல் புகைமூட்டம்

2. Finance Commissions are constituted under which Article of the Indian Constitution?

A) Article 275

B) Article 280

C) Article 282

D) Article 300

இந்திய அரசியலமைப்பின் எந்த சரத்தின் கீழ் நிதி ஆணையங்கள் அமைக்கப் படுகின்றன?

A) சரத்து 275

B) சரத்து 280

C) சரத்து 282

D) சரத்து 300

3. India's rank in the Climate Change Performance Index 2026 is

A) 1st Rank

B) 12th Rank

C) 35th Rank

D) 23rd Rank

2026 ஆம் ஆண்டு பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீட்டில் இந்தியாவின் தர வரிசை யாது?

A) 1வது இடம்

B) 12வது இடம்

C) 35வது இடம்

D) 23வது இடம்

4. Which of the following viral oncogene most commonly associated with cervical cancer?

A) Hepatitis B virus (HBV)

B) Human papillomavirus (HPV)

C) Epstein–Barr virus (EBV)

D) Respiratory Syncytial Virus (RSV)

பின்வருவனவற்றுள் பொதுவாக கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயுடன் தொடர்புடைய புற்றுநோயை உண்டாக்கும் வைரஸ் மரபணு எது?

A) ஹெபடைடிஸ் B வைரஸ் (HBV)

B) மனித பாப்பிலோமா வைரஸ் (HPV)

C) எப்ஸ்டீன்-பார் வைரஸ் (EBV)

D) சுவாச நுண் குழல் அழற்சி வைரஸ் (RSV)

5. World Toilet Day is observed every year on

A) November 15

B) November 18

C) November 19

D) November 20

உலக கழிப்பறை தினம் ஒவ்வோர் ஆண்டும் எந்தத் தேதியில் அனுசரிக்கப் படுகிறது?

A) நவம்பர் 15

B) நவம்பர் 18

C) நவம்பர் 19

D) நவம்பர் 20

6. Who won the Ilakkiya Maamani Awards of 2025?

A) T. Gnanasundaram

B) R. Kamarasu

C) K. Somasundaram

D) All of the above

2025 ஆம் ஆண்டு இலக்கிய மாமணி விருதினை வென்றவர் யார்?

A) T.ஞானசுந்தரம்

B) R.காமராசு

C) K.சோமசுந்தரம்

D) மேற்கூறிய அனைவரும்

7. Choose the incorrect statement regarding G20.

A) The G20 was founded in 1991 following the Asian financial crisis.

B) The G20 Summit 2025 was held in Johannesburg, South Africa.

C) It was the first time a G20 Summit took place on the African continent.

D) The G20 aims to promote global economic stability and cooperation among major economies.

G20 தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஆசிய நிதி நெருக்கடியைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டில் G20 நிறுவப்பட்டது.

B) 2025 ஆம் ஆண்டு G20 உச்சி மாநாடு ஆனது தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது.

C) ஆப்பிரிக்க கண்டத்தில் G20 உச்சி மாநாடு நடைபெற்றது இதுவே முதல் முறையாகும்.

D) உலகப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் முக்கியப் பொருளாதாரங்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை G20 நோக்கமாகக் கொண்டுள்ளது.

8. In Sickle Cell Disease, glutamic acid in hemoglobin is replaced by

A) Lysine

B) Arginine

C) Valine

D) Leucine

அரிவாள் வடிவ உயிரணு இரத்தசோகை நோயில், ஹீமோகுளோபினில் உள்ள குளுட்டமிக் அமிலம் எதனால் மாற்றீடு செய்யப் படுகிறது?

A) லைசின்

B) அர்ஜினைன்

C) வாலின்

D) லியூசின்

9. The IUCN Red List status of Dugong is

A) Vulnerable

B) Endangered

C) Critically Endangered

D) Least Concern

IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் கடற்பசுக்களின் வளங்காப்பு அந்தஸ்து யாது?

A) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

B) அருகி வரும் இனம்

C) மிக அருகி வரும் இனம்

D) தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்

10. What temperature limit does the Paris Agreement set for global warming?

A) Below 3°C

B) below 2°C

C) Exactly 1°C

D) Below 4°C

பாரிசு உடன்படிக்கையானது புவி வெப்பமடைதலுக்கு நிர்ணயித்த வெப்பநிலை வரம்பு யாது?

A) 3°C வெப்ப நிலைக்குக் கீழ்

B) 2°C வெப்ப நிலைக்குக் கீழ்

C) சரியாக 1°C

D) 4°C வெப்ப நிலைக்குக் கீழ்

11. The Battle of Saraighat took place on the banks of which river?

A) Ganga

B) Yamuna

C) Brahmaputra

D) Narmada

சராய்காட் போர் எந்த நதிக்கரையில் நடைபெற்றது?

A) கங்கை

B) யமுனை

C) பிரம்மபுத்திரா

D) நர்மதை

12. Who wrote the book Vanakkam Valluva?

A) Erode Tamizhanban

B) Jayakanthan

C) Kannadasan

D) Mu.metha

வணக்கம் வள்ளுவ என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

A) ஈரோடு தமிழன்பன்

B) ஜெயகாந்தன்

C) கண்ணதாசன்

D) மு.மேத்தா

13. Choose the correct pair regarding exercises and their location in 2025.

A) SURYAKIRAN – Uttarakhand

B) Akhand Prahaar – Rajasthan

C) Garuda – France

D) All the above

2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற பயிற்சிகள் மற்றும் அவை நடைபெற்ற இடம் தொடர்பான சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

A) சூரியகிரண் – உத்தரகாண்ட்

B) அகண்ட் பிரஹார் – ராஜஸ்தான்

C) கருடா – பிரான்ஸ்

D) மேற்கூறிய அனைத்தும்

14. The Consumer Price Index (CPI) in India is released by

A) RBI

B) National Statistical Office

C) Ministry of Finance

D) NITI Aayog

இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டினை (CPI) வெளியிடும் அமைப்பு எது?

A) இந்திய ரிசர்வ் வங்கி

B) தேசியப் புள்ளிவிவர அலுவலகம்

C) நிதி அமைச்சகம்

D) நிதி ஆயோக்

15. Choose the correct statement regarding PM-KISAN.
   A) PM-KISAN is a Central Sector Scheme launched in December 2018.
   B) It provides financial assistance of ₹6,000 annually to eligible farmers in three equal installments.
   C) All landholding farmers are eligible under the scheme.
   D) All statements are correct.

   PM-KISAN தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.
   A) PM-KISAN என்பது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்ட ஒரு மத்திய அரசுத் துறைத் திட்டமாகும்.
   B) இது தகுதியுள்ள விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் 6,000 ரூபாய் மதிப்பிலான நிதி உதவியை மூன்று சம தவணைகளில் வழங்குகிறது.
   C) நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள் ஆவர்.
   D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

16. Which of the following countries was the largest donor of humanitarian aid in 2025?
   A) UAE
   B) India
   C) United States
   D) Japan

   பின்வருவனவற்றுள் 2025 ஆம் ஆண்டில் மனிதாபிமான உதவிகளை அதிக அளவில் வழங்கிய நாடு எது?
   A) ஐக்கிய அரபு அமீரகம்
   B) இந்தியா
   C) அமெரிக்கா
   D) ஜப்பான்

17. Choose the incorrect statement regarding the appointment of the Chief Justice of India (CJI).
   A) Justice Surya Kant took oath as the 52nd Chief Justice of India.
   B) The President of India appoints the CJI under Article 124(2) of the Constitution.
   C) The CJI retires at the age of 65.
   D) The CJI recommends appointments of judges to the President under Articles 124 and 217.

இந்தியாவின் தலைமை நீதிபதி (CJI) நியமனம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இந்தியாவின் 52வது தலைமை நீதிபதியாக நீதிபதி சூர்ய காந்த் பதவியேற்றார்.

B) அரசியலமைப்பின் 124(2)வது சரத்தின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவர் தலைமை நீதிபதியை நியமிக்கிறார்.

C) தலைமை நீதிபதி அவரது 65 வது வயதில் ஓய்வு பெறுகிறார்.

D) 124 மற்றும் 217 ஆகிய சரத்துகளின் கீழ் நீதிபதிகளை நியமிக்க குடியரசுத் தலைவருக்கு இந்தியத் தலைமை நீதிபதி பரிந்துரைக்கிறார்.

18. Uranium in India is mainly found in

A) Sikkim, West Bengal, and Chhattisgarh

B) Gujarat, Karnataka, and Rajasthan

C) Kerala, Odisha, and Tamil Nadu

D) Jharkhand, Andhra Pradesh, and Meghalaya

இந்தியாவில் யுரேனியம் எங்கு பிரதானமாக காணப் படுகிறது?

A) சிக்கிம், மேற்கு வங்காளம் மற்றும் சத்தீஸ்கர்

B) குஜராத், கர்நாடகா மற்றும் இராஜஸ்தான்

C) கேரளா, ஒடிசா மற்றும் தமிழ்நாடு

D) ஜார்க்கண்ட், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேகாலயா

19. Choose the incorrect statement regarding Indira Gandhi's policies and actions.

A) Indira Gandhi served as Prime Minister during the period 1980–1984.

B) "Garibi Hatao" was introduced in the Eighth Five-Year Plan.

C) The 26th Constitutional Amendment (1971) abolished the Privy Purse.

D) The 20 Point Programme was launched in 1975

இந்திரா காந்தியின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இந்திரா காந்தி 1980–1984 ஆகிய காலக் கட்டத்தில் பிரதமராகப் பணியாற்றினார்.

B) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் "கரிபி ஹடாவோ" அறிமுகப்படுத்தப்பட்டது.

C) 26வது அரசியலமைப்புத் திருத்தம் (1971) ஆனது இளவரசர்களின் அரச மானியத்தினை ஒழித்தது.

D) 20 அம்சத் திட்டம் 1975 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது

20. The new helpline number launched by the National Commission for Women (NCW) is

A) 100

B) 181

C) 14490

D) 1091

தேசிய மகளிர் ஆணையத்தினால் (NCW) தொடங்கப்பட்ட புதிய உதவி எண் யாது?

A) 100

B) 181

C) 14490

D) 1091

21. Which lake is associated with Keibul Lamjao National Park?

A) Loktak Lake

B) Chilika Lake

C) Wular Lake

D) Dal Lake

கெய்புல் லம்ஜாவோ தேசியப் பூங்காவுடன் தொடர்புடைய ஏரி எது?

A) லோக்தக் ஏரி

B) சிலிக்கா ஏரி

C) உலார் ஏரி

D) டால் ஏரி

22. Choose the correct statement regarding GI-tagged traditional products.

A) Mathura Zari Poshak – zari attire associated with Lord Krishna.

B) Meerut Bugle – musical instrument

C) Puntong Pulit – bamboo flute

D) All of the above

புவிசார் குறியீடு பெற்ற பாரம்பரியத் தயாரிப்புகள் தொடர்பான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) மதுரா ஜரி போஷக் – கிருஷ்ணருடன் தொடர்புடைய சரிகை வேலைப்பாடு கொண்ட உடை

B) மீரட் பகில் – இசைக்கருவி

C) புண்டோங் புலிட் – மூங்கிலால் ஆன புல்லாங்குழல்

D) மேற்கூறிய அனைத்தும்

23. Which Mughal Emperor ordered to execute Guru Tegh Bahadur?

A) Aurangzeb

B) Akbar

C) Shah Jahan

D) Jahangir

குரு தேக் பகதூரை கொல்ல உத்தரவிட்ட முகலாய பேரரசர் யார்?

A) ஔரங்கசீப்

B) அக்பர்

C) ஷாஜஹான்

D) ஜஹாங்கீர்

24. Juvenile Justice Board deals with children below what age?

A) 14 years

B) 16 years

C) 18 years

D) 21 years

சிறார் நீதி வாரியங்கள் எந்த வயதிற்குட்பட்ட சிறார் குற்றவாளிகளைக் கையாள்கின்றன?

A) 14 வயது

B) 16 வயது

C) 18 வயது

D) 21 வயது

25. Which substances are primarily controlled under the Montreal Protocol?

A) $CO_2$ and $CH_4$

B) CFCs and halons

C) NOx and SOx

D) Mercury and lead

மாண்ட்ரியல் நெறிமுறையின் கீழ் முதன்மையாக எந்தெந்தக் கூறுகள் கட்டுப்படுத்தப் படுகின்றன?

A) $CO_2$ மற்றும் $CH_4$

B) CFC மற்றும் ஹாலோன்கள்

C) NOx மற்றும் SOx

D) பாதரசம் மற்றும் ஈயம்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ***D*** | 2. | ***B*** | 3. | ***D*** | 4. | ***B*** | 5. | ***C*** | 6. | ***D*** | 7. | ***A*** | 8. | ***C*** | 9. | ***A*** | 10. | ***B*** |
| 11. | ***C*** | 12. | ***A*** | 13. | ***D*** | 14. | ***B*** | 15. | ***D*** | 16. | ***C*** | 17. | ***A*** | 18. | ***D*** | 19. | ***B*** | 20. | ***C*** |
| 21. | ***A*** | 22. | ***D*** | 23. | ***A*** | 24. | ***C*** | 25. | ***B*** | | | | | | | | | | |

26. Which global effect is mitigated by the Montreal Protocol?

A) Global warming

B) Ocean acidification

C) Ozone depletion

D) Climate change

மாண்ட்ரியல் நெறிமுறை மூலம் எந்த உலகளாவியப் பாதிப்பு தணிக்கப்படுகிறது?

A) புவி வெப்பமடைதல்

B) பெருங்கடல் அமிலமயமாக்கல்

C) ஓசோன் சிதைவு

D) பருவநிலை மாற்றம்

27. In which year was Aadhaar launched?

A) 2005

B) 2009

C) 2012

D) 2015

ஆதார் எந்த ஆண்டில் தொடங்கப் பட்டது?

A) 2005

B) 2009

C) 2012

D) 2015

28. Dheeran Chinnamalai was executed by the British in

A) Sankagiri Fort

B) Vellore Fort

C) Udayagiri Fort

D) Gingee Fort

தீரன் சின்னமலை எந்த இடத்தில் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்?

A) சங்ககிரி கோட்டை

B) வேலூர் கோட்டை

C) உதயகிரி கோட்டை

D) செஞ்சி கோட்டை

29. Coral reefs are primarily formed by which organisms?

A) Cnidarians

B) Sponges

C) Molluscs

D) Echinoderms

பவளப்பாறைகள் முதன்மையாக எந்த உயிரினங்களால் உருவாக்கப்படுகின்றன?

A) கடற்காஞ்சொறி

B) கடற்பாசிகள்

C) மெல்லுடலிகள்

D) முட்தோலிகள்

30. Which of the following is NOT a constitutionally permitted option for a Governor under Article 200?

A) Grant assent to a bill

B) Withhold assent and return the bill to the legislature

C) Reserve the bill for the President’s consideration

D) Keep the bill pending indefinitely (“pocket veto”)

200வது சரத்தின் கீழ் ஆளுநருக்கு அரசியலமைப்பு ரீதியாக அனுமதிக்கப்படாத ஒரு விருப்பத்தேர்வு எது?

A) ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தல்

B) ஒப்புதலை நிறுத்தி மசோதாவை சட்டமன்றத்திற்கு திருப்பி அனுப்புதல்

C) மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்குதல்

D) மசோதாவை காலவரையின்றி நிலுவையில் வைத்தல் (“பாக்கெட் வீட்டோ”)

31. Who is known as the “Father of the White Revolution” in India?

A) M.S. Swaminathan

B) Verghese Kurien

C) Norman Borlaug

D) Tribhuvandas Patel

இந்தியாவில் “வெண்மைப் புரட்சியின் தந்தை” என்று அழைக்கப்படுபவர் யார்?

A) M.S. சுவாமிநாதன்

B) வர்கீஸ் குரியன்

C) நார்மன் போர்லாக்

D) திரிபுவன்தாஸ் படேல்

32. Choose the incorrect statement regarding the Constitution of India.

A) Constitution Day is observed because the Indian Constitution was adopted on 26 November 1949.

B) The Constitution of India came into effect on 26 January 1950.

C) The Government declared 26 November as Constitution Day in 2010.

D) It is the longest written constitution in the world.

இந்திய அரசியலமைப்பு தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இந்திய அரசியலமைப்பு ஆனது 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று ஏற்றுக் கொள்ளப் பட்டதால் அந்த தினம் அரசியலமைப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

B) இந்திய அரசியலமைப்பு ஆனது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.

C) இந்திய அரசானது, 2010 ஆம் ஆண்டில் நவம்பர் 26 ஆம் தேதியை அரசியலமைப்பு தினமாக அறிவித்தது.

D) இது உலகின் மிக நீண்ட எழுதப்பட்ட அரசியலமைப்பு ஆகும்.

33. The 5th Khelo India University Games started in

A) New Delhi

B) Rajasthan

C) Mumbai

D) Kolkata

5வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் எங்கு தொடங்கப் பட்டுள்ளன?

A) புது டெல்லி

B) இராஜஸ்தான்

C) மும்பை

D) கொல்கத்தா

34. Choose the incorrect statement regarding the Comptroller and Auditor General (CAG) of India.

A) Article 145 of the Constitution creates an independent office of the CAG.

B) The CAG acts as the guardian of India's public money.

C) The CAG is appointed by the President of India.

D) The CAG serves for six years or until the age of 65, whichever comes first.

இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) அரசியலமைப்பின் 145 வது சரத்து, CAG என்ற ஒரு தன்னாட்சிப் பதவியை உருவாக்குகிறது.

B) CAG இந்தியாவின் பொது மக்கள் பணத்தின் பாதுகாவலராகச் செயல்படுகிறார்.

C) CAG இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

D) CAG ஆறு ஆண்டுகள் அல்லது 65 வயது வரை, இதில் எது முதலானதோ அதுவரை பணியாற்றுகிறார்.

35. Cerebral malaria is most commonly caused by

A) Plasmodium vivax

B) Plasmodium malariae

C) Plasmodium falciparum

D) Plasmodium ovale

பெருமூளை மலேரியா பொதுவாக எதனால் ஏற்படுகிறது?

A) பிளாஸ்மோடியம் விவாக்ஸ்

B) பிளாஸ்மோடியம் மலேரியா

C) பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரம்

D) பிளாஸ்மோடியம் ஓவலே

36. Choose the correct statement regarding the Abujhmadiya tribe.

A) Abujhmadiya is a sub-group of the Gond tribe of Central India.

B) Abujhmarh forests spread across Narayanpur, Bijapur, and Dantewada districts of Chhattisgarh.

C) Their major festivals are Pola, Kakasar, and Pandum.

D) All statements are correct.

அபுஜ்மதியா பழங்குடியினரைப் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) அபுஜ்மதியா என்பது மத்திய இந்தியாவின் கோண்ட் பழங்குடியினரின் துணைக் குழுவாகும்.

B) அபுஜ்மர் காடுகள் சத்தீஸ்கரின் நாராயண்பூர், பிஜாப்பூர் மற்றும் தண்டேவாடா மாவட்டங்களில் பரவியுள்ளன.

C) அவர்களின் முக்கியப் பண்டிகைகள் போலா, ககாசர் மற்றும் பாண்டம் ஆகியன ஆகும்.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

37. The reddish appearance of Mars is mainly due to the presence of

A) Silicon dioxide

B) Aluminium oxide

C) Iron oxide

D) Carbon dioxide

செவ்வாய்க் கிரகத்தின் சிவப்பு நிறத் தோற்றம் முதன்மையாக எதனுடைய இருப்பின் காரணமாக ஏற்படுகிறது?

A) சிலிக்கான் டை ஆக்சைடு

B) அலுமினிய ஆக்சைடு

C) இரும்பு ஆக்சைடு

D) கார்பன் டை ஆக்சைடு

38. Choose the incorrect statement regarding India's Milk and Egg Production.

A) National Milk Day will be observed on November 26, 2025.

B) India became the largest milk producer in the world.

C) The top milk-producing states include Uttar Pradesh, Rajasthan, Madhya Pradesh, Gujarat, and Maharashtra.

D) India ranks third globally in egg production.

இந்தியாவின் பால் மற்றும் முட்டை உற்பத்தி தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 2025 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று தேசியப் பால் தினம் அனுசரிக்கப் படுகிறது.

B) உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக இந்தியா மாறியது.

C) பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை அடங்கும்.

D) முட்டை உற்பத்தியில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

39. The IUCN conservation status of the jaguar is

A) Near Threatened

B) Vulnerable

C) Endangered

D) Least Concern

IUCN பட்டியலில் ஜாகுவாரின் வளங்காப்பு நிலை யாது?

A) அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்

B) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

C) அருகி வரும் இனம்

D) தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்

40. The base year currently used for calculating the Wholesale Price Index (WPI) in India is

A) 2004–05

B) 2011–12

C) 2015–16

D) 2020–21

இந்தியாவில் மொத்த விலைக் குறியீட்டை (WPI) கணக்கிடுவதற்கு தற்போது பயன்படுத்தப் படும் அடிப்படை ஆண்டு யாது?

A) 2004–05

B) 2011–12

C) 2015–16

D) 2020–21

41. Which city became the world's most populous urban area in 2025?

A) Tokyo

B) Jakarta

C) Delhi

D) Shanghai

2025 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நகர்ப்புறப் பகுதியாக உருவெடுத்துள்ள நகரம் எது?

A) டோக்கியோ

B) ஜகார்த்தா

C) டெல்லி

D) ஷாங்காய்

42. Which of the following is NOT a function of the Central Board of Direct Taxes (CBDT)?

A) Formulation of direct tax policy

B) Monitoring the administration of Corporate Tax

C) Collection of customs duties

D) Supervision of Income Tax Department

பின்வருவனவற்றில் மத்திய நேரடி வரி வாரியத்தின் (CBDT) செயல்பாடு அல்லாதது எது?

A) நேரடி வரிக் கொள்கையை உருவாக்குதல்

B) பெரு நிறுவன வரி நிர்வாகத்தைக் கண்காணித்தல்

C) சுங்க வரிகளை வசூலித்தல்

D) வருமான வரித் துறையினை மேற்பார்வையிடுதல்

43. Auramine O is considered dangerous because it is a

A) Toxic carcinogenic dye

B) Natural allergen

C) Harmless colouring agent

D) Permitted food additive

ஆரமைன் O என்பது எதன் காரணமாக ஆபத்தானதாகக் கருதப்படுகிறது?

A) ஒரு நச்சுத்தன்மை வாய்ந்த புற்றுநோய் உண்டாக்கும் சாயம்

B) இயற்கை ஒவ்வாமை காரணி

C) தீங்கற்ற வண்ணமேற்றுக் காரணி

D) அனுமதிக்கப்பட்ட உணவுச் சேர்க்கைகள்

44. ORS works mainly by helping the body to absorb

A) Proteins and amino acids

B) Fats and fatty acids

C) Water and electrolytes

D) Vitamins and minerals

ORS ஆனது உடலில் முதன்மையாக எவற்றை உறிஞ்சுவதற்கு உதவுவதன் மூலம் செயல்படுகிறது?

A) புரதங்கள் மற்றும் அமினோ அமிலங்கள்

B) கொழுப்புகள் மற்றும் கொழுப்பு அமிலங்கள்

C) நீர் மற்றும் மின்பகு பொருட்கள்

D) வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்

45. Which is India's first Integrated Financial City?

A) GIFT City

B) Amaravati

C) Navi Mumbai

D) Jaipur

இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த நிதி நகரம் எது?

A) GIFT நகரம்

B) அமராவதி

C) நவி மும்பை

D) ஜெய்ப்பூர்

46. Choose the correct statement regarding festivals of North-East India.

A) Hornbill Festival – Nagaland

B) Wangala Festival – Meghalaya

C) Bihu Festival – Assam

D) All the above

வடகிழக்கு இந்தியாவின் பண்டிகைகள் தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இருவாட்சி திருவிழா – நாகாலாந்து

B) வங்கலா திருவிழா – மேகாலயா

C) பிஹு திருவிழா – அசாம்

D) மேற்கூறிய அனைத்தும்

47. Which state passed the Prevention of Cruelty to Animals Bill, 2025?

A) West Bengal

B) Meghalaya

C) Assam

D) Tripura

2025 ஆம் ஆண்டு விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்பு மசோதாவினை எந்த மாநிலம் நிறைவேற்றியுள்ளது?

A) மேற்கு வங்காளம்

B) மேகாலயா

C) அசாம்

D) திரிபுரா

48. India launched Operation Sagar Bandhu to help which country after Cyclone Ditwah?

A) Maldives

B) Sri Lanka

C) Bangladesh

D) Myanmar

டிட்வா புயலுக்குப் பிறகு, இந்திய அரசானது எந்த நாட்டிற்கு உதவுவதற்காக சாகர் பந்து நடவடிக்கையினைத் தொடங்கியது?

A) மாலத்தீவுகள்

B) இலங்கை

C) வங்காளதேசம்

D) மியான்மர்

49. Which national park is famous for Nilgiri Tahr conservation?

A) Periyar National Park

B) Bandipur National Park

C) Eravikulam National Park

D) Silent Valley National Park

நீலகிரி வரையாடுகளின் வளங்காப்பிற்குப் பெயர் பெற்ற தேசியப் பூங்கா எது?

A) பெரியார் தேசியப் பூங்கா

B) பந்திப்பூர் தேசியப் பூங்கா

C) எரவிகுளம் தேசியப் பூங்கா

D) அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா

50. Where will India establish the National Coral Reef Research Institute (NCRRI)?

A) South Andaman

B) Great Nicobar

C) Pamban island

D) Agatti island

தேசிய பவளப்பாறை ஆராய்ச்சி நிறுவனத்தை (NCRRI) இந்தியா எங்கு நிறுவ உள்ளது?

A) தெற்கு அந்தமான்

B) கிரேட் நிக்கோபார்

C) பாம்பன் தீவு

D) அகட்டி தீவு

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26. | ***C*** | 27. | ***B*** | 28. | ***A*** | 29. | ***A*** | 30. | ***D*** | 31. | ***B*** | 32. | ***C*** | 33. | ***B*** | 34. | ***A*** | 35. | ***C*** |
| 36. | ***D*** | 37. | ***C*** | 38. | ***D*** | 39. | ***A*** | 40. | ***B*** | 41. | ***B*** | 42. | ***C*** | 43. | ***A*** | 44. | ***C*** | 45. | ***B*** |
| 46. | ***D*** | 47. | ***C*** | 48. | ***B*** | 49. | ***C*** | 50. | ***A*** | | | | | | | | | | |

51. India's longest cantilever glass skywalk was launched in

A) Araku Valley

B) Kailasagiri hilltop park

C) Simhachalam

D) Borra Caves

இந்தியாவின் மிக நீளமான கண்ணாடியால் ஆன மேம்பால நடைபாதை எங்கு திறக்கப்பட்டுள்ளது?

A) அரக்குப் பள்ளத்தாக்கு

B) கைலாசகிரி மலை உச்சிப் பூங்கா

C) சிம்ஹாச்சலம்

D) போரா குகைகள்

52. The two natural satellites of Mars are

A) Phobos and Deimos

B) Titan and Rhea

C) Ganymede and Callisto

D) Oberon and Ariel

செவ்வாய்க் கிரகத்தின் இரண்டு துணைக்கோள்கள் யாவை?

A) போபோஸ் மற்றும் டெய்மோஸ்

B) டைட்டன் மற்றும் ரிஹ்யா

C) கைனிமேடே மற்றும் காலிஸ்டோ

D) ஒபரான் மற்றும் ஏரியல்

53. Who is known as the "Missile Woman of India"?

A) Ritu Karidhal

B) Nigar Shaji

C) Tessy Thomas

D) Kalpana Chawla

"இந்தியாவின் எறிகணைப் பெண்மணி" என்று அழைக்கப்படுபவர் யார்?

A) ரிது கரிதல்

B) நிகர் ஷாஜி

C) டெஸ்ஸி தாமஸ்

D) கல்பனா சாவ்லா

54. Who is known as the "Trinity of Carnatic Music"?

A) Purandara Dasa, Annamacharya, Kanakadasa

B) Tyagaraja, Muthuswami Dikshitar, Shyama Shastri

C) Swathi Thirunal, Papanasam Sivan, Oothukadu Venkata Kavi

D) Kshetrayya, Narayana Teertha, Jagannatha Dasa

"கர்நாடக இசையின் மும்மூர்த்திகள்" என்று அழைக்கப்படுபவர்கள் யாவர்?

A) புரந்தர தாசர், அன்னமாச்சார்யர், கனகதாசர்

B) தியாகராஜர், முத்துசுவாமி தீட்சிதர், ஷ்யாமா சாஸ்திரி

C) சுவாதி திருநாள், பாபநாசம் சிவன், ஊத்துகாடு வேங்கட கவி

D) சேத்ரய்யா, நாராயண தீர்த்தர், ஜகந்நாத தாசர்

55. Which of the following statements is correct?

A) Raj Bhavan is for Lieutenant Governors; Raj Niwas is for State Governors.

B) Both Raj Bhavan and Raj Niwas are for State Governors.

C) Raj Bhavan is for State Governors; Raj Niwas is for Lieutenant Governors.

D) There are no such specific conditions regarding the names

பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

A) இராஜ் பவன் துணை நிலை ஆளுநர்களுக்கானது; இராஜ் நிவாஸ் மாநில ஆளுநர்களுக்கானது.

B) இராஜ் பவன் மற்றும் இராஜ் நிவாஸ் இரண்டும் மாநில ஆளுநர்களுக்கானது.

C) இராஜ் பவன் மாநில ஆளுநர்களுக்கானது; இராஜ் நிவாஸ் துணை நிலை ஆளுநர்களுக்கானது.

D) பெயர்கள் தொடர்பாக அத்தகைய குறிப்பிட்ட நிபந்தனைகள் எதுவும் இல்லை.

56. Which type of Chronic Obstructive Pulmonary Disease (COPD) is characterized by destruction of alveoli?

A) Chronic bronchitis

B) Emphysema

C) Asthma

D) Pulmonary fibrosis

எந்த வகையான நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD) ஆனது காற்று நுண்ணறைகளின் அழிவைக் கொண்ட பண்பாக அடையாளம் காணப்படுகிறது?

A) நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி

B) எம்பைசிமா

C) ஆஸ்துமா

D) நுரையீரல் ஃபைப்ரோஸிஸ்

57. The ozone layer is mainly found in which part of the atmosphere?

A) Stratosphere

B) Troposphere

C) Mesosphere

D) Thermosphere

ஓசோன் படலம் ஆனது முதன்மையாக வளிமண்டலத்தின் எந்தப் பகுதியில் காணப் படுகிறது?

A) படை அடுக்கு மண்டலம்

B) அடியடுக்கு மண்டலம்

C) இடையடுக்கு மண்டலம்

D) வெப்ப அடுக்கு மண்டலம்

58. Which forest division is launching the 'Golden Jackal Ambassadors' scheme?

A) Sundarbans Forest Division

B) Nilgiris Forest Division

C) Tenkasi Forest Division

D) Bandipur Forest Division

எந்த வனப் பிரிவு ஆனது 'பொன்னிறக் குள்ள நரி வளங்காப்புத் தூதர்கள்' திட்டத்தைத் தொடங்கியுள்ளது?

A) சுந்தரவன வனப் பிரிவு

B) நீலகிரி வனப் பிரிவு

C) தென்காசி வனப் பிரிவு

D) பந்திப்பூர் வனப் பிரிவு

59. What is a tropical cyclone?

A) A low-pressure system with strong winds

B) A high-pressure system with cold winds

C) A dry wind storm over ocean

D) A seasonal wind system

வெப்பமண்டலப் புயல் என்றால் என்ன?

A) பலத்த காற்றுடன் கூடிய தாழ்வழுத்த அமைப்பு

B) குளிர்ந்த காற்றுடன் கூடிய உயரழுத்த அமைப்பு

C) கடலில் ஏற்படும் ஈரப்பதமற்ற காற்றுப் புயல்

D) பருவகாலக் காற்று மண்டலம்

60. Choose the incorrect statement regarding Geographical Indication (GI) products of Tamil Nadu.

A) Cotton sari – Woraiyur

B) Nattu sakkarai – Karur

C) Soapstone cookware – Namakkal

D) Choppu saman – Ambasamudram

தமிழ்நாட்டின் புவிசார் குறியீடு (GI) பெற்ற தயாரிப்புகள் தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) பருத்தி சேலை – உறையூர்

B) நாட்டுச் சக்கரை – கரூர்

C) மாக்கல் சமையல் பாத்திரங்கள் - நாமக்கல்

D) சொப்பு சாமன்கள் – அம்பாசமுத்திரம்

61. India's Total Fertility Rate (TFR) in 2025 is

A) 2.1

B) 2.5

C) 1.9

D) 1.5

2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) யாது?

A) 2.1

B) 2.5

C) 1.9

D) 1.5

62. The IUCN conservation status of the Indian Edible-Nest Swiftlet is

A) Endangered

B) Vulnerable

C) Near Threatened

D) Least Concern

இந்திய உண்ணக் கூடிய மற்றும் கூடு கட்டும் உழவாரன் பறவையின் IUCN வளங் காப்பு அந்தஸ்து யாது?

A) அருகி வரும் இனம்

B) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

C) அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்

D) தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்

63. Which monsoon is mainly responsible for floods in most parts of India?

A) Northeast Monsoon

B) Southwest Monsoon

C) Winter Monsoon

D) None of the above

இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படுவதற்கு முக்கியமாக காரணமாக அமையும் பருவக்காற்று எது?

A) வடகிழக்கு பருவக் காற்று

B) தென்மேற்கு பருவக் காற்று

C) குளிர்கால பருவக் காற்று

D) மேற்கூறிய எதுவும் இல்லை

64. Which of the following are considered as part of the fiscal deficit of the Union Government?

A) Borrowings from the Reserve Bank of India

B) Borrowings from the public through market loans

C) Expenditure on subsidies

D) All of the above

பின்வருவனவற்றில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையின் ஒரு பகுதியாகக் கருதப் படுபவை எவை?

A) இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்படும் கடன்கள்

B) சந்தைக் கடன்கள் மூலம் பொதுமக்களிடமிருந்து கடன் வாங்குதல்

C) மானியங்களுக்கான செலவினம்

D) மேற்கூறிய அனைத்தும்

65. The Fujiwhara Effect refers to

A) Interaction between ocean currents

B) Interaction between two nearby cyclones

C) Formation of anticyclones

D) Movement of jet streams

ஃபுஜிவாரா விளைவு எதனைக் குறிக்கிறது?

A) பெருங்கடல் நீரோட்டங்களுக்கு இடையிலான தொடர்பு

B) அருகருகே உள்ள இரண்டு புயல்களுக்கு இடையிலான தொடர்பு

C) எதிர்ச் சூறாவளிகளின் உருவாக்கம்

D) ஜெட் நீரோட்டங்களின் இயக்கம்

66. Who won the Kamla Bhasin Award (South Asia) 2025 for promoting gender equality?

A) Mohana Sundari

B) Kavita Krishnan

C) Shaheen Bagh

D) Ritu Karidhal

பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்ததற்காக 2025 ஆம் ஆண்டிற்கான கமலா பாசின் விருதை (தெற்காசியா) வென்றவர் யார்?

A) மோகன சுந்தரி

B) கவிதா கிருஷ்ணன்

C) ஷாஹீன் பாக்

D) ரிது கரிதால்

67. Choose the incorrect statement regarding the State of Nagaland.

A) Nagaland became the 16th state of India on 1 December 1963.

B) Nagaland shares its border with Arunachal Pradesh, Assam, Manipur, and Bangladesh.

C) The capital city of Nagaland is Kohima.

D) Nagaland has 16 major tribes.

நாகாலாந்து மாநிலம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 1963 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று நாகாலாந்து இந்தியாவின் 16வது மாநிலமாக மாறியது.

B) நாகாலாந்து மாநிலமானது அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர் மற்றும் வங்காள தேசத்துடன் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.

C) நாகாலாந்தின் தலைநகரம் கோஹிமா ஆகும்.

D) நாகாலாந்தில் 16 முக்கியப் பழங்குடியினர் உள்ளனர்.

68. HIV primarily attacks which cells of the immune system?

A) Red blood cells

B) Platelets

C) T-lymphocytes

D) B lymphocytes

எச்ஐவி தொற்றானது, முதன்மையாக நோயெதிர்ப்பு மண்டலத்தின் எந்த செல்களைத் தாக்குகிறது?

A) சிவப்பு இரத்த அணுக்கள்

B) இரத்தத் தட்டையணுக்கள்

C) T-லிம்போசைட்டுகள்

D) B லிம்போசைட்டுகள்

69. Which of the following statements about the Non-Cooperation Movement (1920-22) is correct?

A) It was led by Gandhi against the Rowlatt Act and Jallianwala Bagh massacre.

B) The movement called for boycott of British institutions, schools, and courts.

C) Lord Chelmsford served as the viceroy of India During the Movement

D) All statements are correct.

ஒத்துழையாமை இயக்கம் (1920-22) பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

A) இது ரௌலட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிராக காந்தியால் வழி நடத்தப் பட்டது.

B) இந்த இயக்கம் ஆனது பிரிட்டிஷ் நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்களைப் புறக்கணிக்க அழைப்பு விடுத்தது.

C) இந்த இயக்கத்தின் போது செல்ம்ஸ்ஃபோர்ட் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாகப் பணியாற்றினார்.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

70. Which airport became India's first water-positive airport?

A) Indira Gandhi International Airport, Delhi

B) Chhatrapati Shivaji Maharaj International Airport, Mumbai

C) Kempegowda International Airport, Bengaluru

D) Rajiv Gandhi International Airport, Hyderabad

இந்தியாவின் முதல் மீள் நீரேற்ற விமான நிலையமாக மாறியுள்ள விமான நிலையம் எது?

A) இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், டெல்லி

B) சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையம், மும்பை

C) கெம்பகௌடா சர்வதேச விமான நிலையம், பெங்களூரு

D) இராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம், ஐதராபாத்

71. Choose the incorrect statement regarding famous temples in India.

A) Vaishno Devi Temple – Jammu

B) Kedarnath Temple – Uttar Pradesh

C) Somnath Temple – Gujarat

D) Konark Sun Temple – Odisha

இந்தியாவில் உள்ள பிரபலமான கோயில்கள் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) வைஷ்ணவோ தேவி கோயில் - ஜம்மு

B) கேதார்நாத் கோயில் - உத்தரப் பிரதேசம்

C) சோம்நாத் கோயில் - குஜராத்

D) கோனார்க் சூரிய கோயில் – ஒடிசா

72. Which Article empowers the President to specify the Scheduled Tribes for each State and Union Territory?

A) Article 341

B) Article 342

C) Article 366

D) Article 370

ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஒன்றியப் பிரதேசத்திற்கும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரைக் குறிப்பிடுவதற்கு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கின்ற சரத்து எது?

A) சரத்து 341

B) சரத்து 342

C) சரத்து 366

D) சரத்து 370

73. What is the main objective of the e-Swathu 2.0 platform?

A) Digital payment of taxes

B) Digitalise property management in gram panchayats

C) Promote e-learning in schools

D) Monitor rural employment schemes

e-Swathu 2.0 தளத்தின் முக்கிய நோக்கம் யாது?

A) டிஜிட்டல் வழி வரி செலுத்தல்

B) கிராமப் பஞ்சாயத்துகளில் சொத்து மேலாண்மையை டிஜிட்டல் மயமாக்குதல்

C) பள்ளிகளில் இணைய வழிக் கற்றலை ஊக்குவித்தல்

D) கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்

74. Choose the incorrect statement regarding environmental laws in India.

A) The 1984 Bhopal Gas Tragedy was caused by a leak of Methyl Isocyanate (MIC) gas.

B) The Environment Protection Act was enacted in 1986.

C) The Air (Prevention and Control of Pollution) Act was enacted in 1974.

D) The Water (Prevention and Control of Pollution) Act was enacted in 1974.

இந்தியாவில் சுற்றுச்சூழல் சட்டங்கள் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 1984 ஆம் ஆண்டு போபால் விஷவாயு துயரச் சம்பவம் மெத்தில் ஐசோசயனேட் (MIC) வாயு கசிவால் ஏற்பட்டது.

B) சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

C) காற்று (மாசுபாட்டைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம் 1974 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

D) நீர் (மாசுபாட்டைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம் 1974 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

75. The Parava community was traditionally involved in

A) Sea grass harvest

B) Pearl diving

C) Amur Falcon conservation

D) Great Indian Bustard conservation

பரவர் சமூகத்தினர் பாரம்பரியமாக எந்த நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர்?

A) கடற்புல்களின் சேகரிப்பு

B) முத்துக் குளித்தல்

C) அமூர் வல்லூறின் வளங்காப்பு

D) கான மயில் வளங்காப்பு

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51. | ***B*** | 52. | ***A*** | 53. | ***C*** | 54. | ***B*** | 55. | ***C*** | 56. | ***B*** | 57. | ***A*** | 58. | ***C*** | 59. | ***A*** | 60. | ***B*** |
| 61. | ***C*** | 62. | ***D*** | 63. | ***B*** | 64. | ***D*** | 65. | ***B*** | 66. | ***A*** | 67. | ***B*** | 68. | ***C*** | 69. | ***D*** | 70. | ***A*** |
| 71. | ***B*** | 72. | ***B*** | 73. | ***B*** | 74. | ***D*** | 75. | ***B*** | | | | | | | | | | |

---

76. The 10th Schedule was added by which Constitutional Amendment?

A) 42nd Amendment

B) 44th Amendment

C) 52nd Amendment

D) 61st Amendment

10வது அட்டவணையானது எந்த அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் சேர்க்கப் பட்டது?

A) 42வது சட்டத் திருத்தம்

B) 44வது சட்டத் திருத்தம்

C) 52வது சட்டத் திருத்தம்

D) 61வது சட்டத் திருத்தம்

77. Which of the following is a secondary air pollutant?

A) Sulfur dioxide

B) Ozone

C) Carbon monoxide

D) Lead

பின்வருவனவற்றில் இரண்டாம் நிலை காற்று மாசுபடுத்தி எது?

A) சல்பர் டை ஆக்சைடு

B) ஓசோன்

C) கார்பன் மோனாக்சைடு

D) ஈயம்

78. What is the required majority to pass the impeachment motion in Parliament?

A) Two-thirds majority of total members of both Houses

B) Simple majority

C) Two-thirds majority of members present and voting

D) Three-fourths majority of total members

பாராளுமன்றத்தில் பதவி நீக்கத் தீர்மானத்தை நிறைவேற்ற தேவையான பெரும்பான்மை யாது?

A) இரு அவைகளின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை

B) எளிய பெரும்பான்மை

C) மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாக்களித்தல்

D) மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மை

79. Choose the correct statement regarding India's joint military exercises.

A) Harimau Shakti - India and Malaysia.

B) Ekuverin - India and Maldives.

C) Yudh Abhyas - India and the United States.

D) All the above

இந்தியாவின் கூட்டு இராணுவப் பயிற்சிகள் தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஹரிமாவ் சக்தி - இந்தியா மற்றும் மலேசியா.

B) ஈகுவெரின் - இந்தியா மற்றும் மாலத்தீவுகள்.

C) யுத் அபியாஸ் - இந்தியா மற்றும் அமெரிக்கா.

D) மேற்கூறிய அனைத்தும்

80. At which port did India launch its first all-electric green tug?

A) Jawaharlal Nehru Port

B) Deendayal Port

C) Chennai Port

D) Marmagao Port

இந்தியா முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் தனது முதல் பசுமை இழுவைக் கப்பலை எந்த துறைமுகத்தில் அறிமுகம் செய்தது?

A) ஜவஹர்லால் நேரு துறைமுகம்

B) தீன்தயாள் துறைமுகம்

C) சென்னை துறைமுகம்

D) மர்மகோவா துறைமுகம்

81. Where will the Indian Navy establish a new naval detachment?

A) Andaman Island

B) Lakshadweep Island

C) Bitra Island

D) Majuli Island

இந்தியக் கடற்படையானது அதன் புதிய சிறு கடற்படைப் பிரிவை எங்கு நிறுவ உள்ளது?

A) அந்தமான் தீவு

B) இலட்சத்தீவு

C) பித்ரா தீவு

D) மஜுலி தீவு

82. Who received the Kalaignar Ezhuthukol Award 2024?

A) R. Krishnamurthy

B) T.E.R. Sukumar

C) S. Gurumurthy

D) N. Ram

2024 ஆம் ஆண்டின் கலைஞர் எழுதுகோல் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

A) R. கிருஷ்ணமூர்த்தி

B) T.E.R. சுகுமார்

C) S. குருமூர்த்தி

D) N. ராம்

83. Choose the incorrect statement about B.R. Ambedkar.

A) Ambedkar embraced Buddhism on 14th October 1956.

B) He resigned from Nehru's cabinet in 1951.

C) He served as India's first Law Minister.

D) He was awarded the Bharat Ratna posthumously in 1991.

B.R. அம்பேத்கர் பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியன்று புத்த மதத்தைத் தழுவினார்.

B) அவர் 1951 ஆம் ஆண்டில் நேருவின் அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்தார்.

C) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார்.

D) அவரது மறைவுக்குப் பின்னதாக 1991 ஆம் ஆண்டில் அவருக்கு பாரத ரத்னா வழங்கப் பட்டது.

84. Under which Article of the Indian Constitution, does the Governor appoint the Chief Minister?

A) Article 163

B) Article 152

C) Article 155

D) Article 356

ஆளுநர், இந்திய அரசியலமைப்பின் எந்த சரத்தின் கீழ் முதலமைச்சரை நியமிக்கிறார்?

A) சரத்து 163

B) சரத்து 152

C) சரத்து 155

D) சரத்து 356

85. Flash floods are characterized by

A) Slow rise of water levels

B) Long duration of flooding

C) Sudden and rapid rise in water levels

D) Occurrence only in coastal areas

திடீர் வெள்ளம் எதைக் கொண்டு வகைப்படுத்தப் படுகிறது?

A) நீர் மட்டங்களில் ஏற்படும் மெதுவான உயர்வு

B) நீண்ட கால வெள்ளப் பெருக்கு

C) நீர் மட்டங்களில் ஏற்படும் திடீர் மற்றும் விரைவான உயர்வு

D) கடலோரப் பகுதிகளில் மட்டுமே நீர்மட்ட உயர்வு நிகழ்தல்

86. Which Indian state launched 1Bio, the country's first single-use bioprocess facility?

A) Karnataka

B) Maharashtra

C) Telangana

D) Tamil Nadu

1Bio எனப்படும் நாட்டின் முதல் ஒற்றைப் பயன்பாட்டு உயிரிச் செயல்முறை வசதியை அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?

A) கர்நாடகா

B) மகாராஷ்டிரா

C) தெலங்கானா

D) தமிழ்நாடு

87. What does the term Total Fertility Rate (TFR) refer to?

A) Total number of children born in a year

B) Average number of children a woman is expected to have during her reproductive years

C) Number of women in the reproductive age group

D) Total population growth rate

மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) என்ற சொல் எதைக் குறிக்கிறது?

A) ஓராண்டில் பிறக்கும் மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை

B) ஒரு பெண் தனது இனப்பெருக்க ஆண்டுகளில் பெற்றெடுக்கும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை

C) இனப்பெருக்க வயதுடைய பெண்களின் எண்ணிக்கை

D) மொத்த மக்கள்தொகை வளர்ச்சி விகிதம்

88. Which state scored the highest in the State Energy Efficiency Index 2024?

A) Maharashtra

B) Karnataka

C) Tamil Nadu

D) Gujarat

2024 ஆம் ஆண்டு மாநில எரிசக்தி திறன் குறியீட்டில் அதிக மதிப்பெண் பெற்ற மாநிலம் எது?

A) மகாராஷ்டிரா

B) கர்நாடகா

C) தமிழ்நாடு

D) குஜராத்

89. Choose the correct statement regarding the Viksit Bharat–Guarantee for Rozgar and Ajeevika Mission (Gramin) Act, 2025.

A) It increases guaranteed rural employment from 100 to 125 days.

B) It replaces the Mahatma Gandhi National Rural Employment Guarantee Act (MGNREGA), 2005.

C) It is implemented by the Ministry of Panchayati Raj.

D) It reduces state participation in funding rural employment.

விக்ஸித் பாரத் - ரோஜ்கர் மற்றும் அஜீவிகா மிஷன் (கிராமம்) சட்டம், 2025 தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இது உத்தரவாதமான கிராமப்புற வேலைவாய்ப்பை 100 நாட்களிலிருந்து 125 நாட்களாக அதிகரிக்கிறது.

B) இது 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்திற்கு (MGNREGA) மாற்றாக அமைகிறது.

C) இது பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

D) இது ஊரக வேலைவாய்ப்புக்கு நிதியளிப்பதில் மாநில அரசின் பங்களிப்பைக் குறைக்கிறது.

90. Who is the head of the 23rd Law Commission of India?

A) N.V. Ramana

B) Dinesh Maheshwari

C) R.F. Nariman

D) U.U. Lalit

இந்தியாவின் 23வது சட்ட ஆணையத்தின் தலைவர் யார்?

A) N.V. ரமணா

B) தினேஷ் மகேஸ்வரி

C) R.F. நாரிமன்

D) U.U. லலித்

91. Indian Navy Day is observed on

A) January 09

B) August 05

C) December 04

D) July 17

இந்தியக் கடற்படை தினம் எப்போது கொண்டாடப் படுகிறது?

A) ஜனவரி 09

B) ஆகஸ்ட் 05

C) டிசம்பர் 04

D) ஜூலை 17

92. Which country has approved the Reciprocal Exchange of Logistics Support (RELOS) agreement with India?

A) Russia

B) China

C) Japan

D) Australia

இந்தியாவுடனான பரஸ்பரத் தளவாடப் பரிமாற்ற ஆதரவு (RELOS) ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ள நாடு எது?

A) ரஷ்யா

B) சீனா

C) ஜப்பான்

D) ஆஸ்திரேலியா

93. What is India's rank in the Women, Peace and Security Index 2025/26?

A) 120

B) 131

C) 125

D) 135

2025/26 ஆம் ஆண்டு பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை யாது?

A) 120

B) 131

C) 125

D) 135

94. Which of the following bank/s is/are classified as Domestic Systemically Important Banks (D-SIBs) for 2025?

A) SBI

B) HDFC Bank

C) ICICI Bank

D) All of the above

பின்வருவனவற்றுள் 2025 ஆம் ஆண்டிற்கான அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகள் (D-SIBs) என வகைப்படுத்தப்பட்டுள்ள வங்கி எது?

A) SBI

B) HDFC வங்கி

C) ICICI வங்கி

D) மேற்கூறிய அனைத்தும்

95. Choose the incorrect statement regarding Dadabhai Naoroji.

A) He developed the Drain of Wealth Theory explaining the economic exploitation of India under British rule.

B) He was a founding member of the Indian National Congress.

C) He became the first Indian Member of the British Parliament in 1853.

D) He was known as the "Unofficial Ambassador of India."

தாதாபாய் நௌரோஜி பற்றிய தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியாவின் பொருளாதார சுரண்டலை விளக்கும் Drain of Wealth என்ற கோட்பாட்டை அவர் உருவாக்கினார்.

B) அவர் இந்திய தேசிய காங்கிரஸின் ஸ்தாபன உறுப்பினராக இருந்தார்.

C) 1853 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் முதல் இந்திய உறுப்பினரானார்.

D) அவர் "இந்தியாவின் அதிகாரப்பூர்வமற்றத் தூதர்" என்று அறியப்பட்டார்.

96. Which country was elected to the UNESCO Man and the Biosphere (MAB) Council (2025–2029)?

A) Qatar

B) Oman

C) UAE

D) Kuwait

யுனெஸ்கோ அமைப்பின் மனிதன் மற்றும் உயிர்க்கோள (MAB) சபைக்கு (2025–2029) தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு எது?

A) கத்தார்

B) ஓமன்

C) ஐக்கிய அரபு அமீரகம்

D) குவைத்

97. Choose the incorrect statement regarding cheetahs in India.

A) India declared cheetahs extinct in 1952.

B) Project Cheetah was launched in 2022 to reintroduce cheetahs.

C) Cheetahs are listed as Endangered by the IUCN.

D) International Cheetah Day 2025 is observed on December 04.

இந்தியாவில் சிவிங்கிப் புலிகள் பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 1952 ஆம் ஆண்டில் இந்தியா சிவிங்கிப் புலிகள் அழிந்துவிட்டதாக அறிவித்தது.

B) சிவிங்கிப் புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்த 2022 ஆம் ஆண்டில் சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

C) சிவிங்கிப் புலிகள் IUCN அமைப்பினால் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

D) சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 04 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.

98. Which African country became the first to eliminate river blindness?

A) Niger

B) Nigeria

C) Ghana

D) Kenya

ஆற்றுக் குருடு நோயை முதன்முதலில் ஒழித்த ஆப்பிரிக்க நாடு எது?

A) நைஜர்

B) நைஜீரியா

C) கானா

D) கென்யா

99. Which state's cabinet approved the Hate Speech and Hate Crimes Bill 2025?

A) Maharashtra

B) Karnataka

C) Tamil Nadu

D) Kerala

2025 ஆம் ஆண்டு வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்பு ரீதியாக இழைக்கப்படும் குற்றங்கள் மசோதாவை அங்கீகரித்த மாநில அமைச்சரவை எது?

A) மகாராஷ்டிரா

B) கர்நாடகா

C) தமிழ்நாடு

D) கேரளா

100. Choose the correct statement regarding PM-KUSUM implementation.

A) PM-KUSUM is implemented by the Ministry of New and Renewable Energy.

B) The scheme provides financial support to farmers for installing solar pumps.

C) It also allows farmers to sell surplus solar power to the grid.

D) All statements are correct.

PM-KUSUM அமலாக்கம் தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) PM-KUSUM புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் செயல்படுத்தப் படுகிறது.

B) இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றுக் குழாய்களை நிறுவுவதற்கு நிதி உதவி வழங்குகிறது.

C) இது விவசாயிகள் உபரியான சூரிய மின் ஆற்றலை மின் விநியோகக் கட்டமைப்பிற்கு விற்கவும் அனுமதிக்கிறது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 76. | ***C*** | 77. | ***B*** | 78. | ***A*** | 79. | ***D*** | 80. | ***B*** | 81. | ***C*** | 82. | ***B*** | 83. | ***D*** | 84. | ***A*** | 85. | ***C*** |
| 86. | ***C*** | 87. | ***B*** | 88. | ***C*** | 89. | ***A*** | 90. | ***B*** | 91. | ***C*** | 92. | ***A*** | 93. | ***B*** | 94. | ***D*** | 95. | ***C*** |
| 96. | ***B*** | 97. | ***C*** | 98. | ***A*** | 99. | ***B*** | 100. | ***D*** | | | | | | | | | | |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★